# கிறிஸ்து மீண்டும் வருவது மிகவும் சிறந்தது




## 5.3 மகிமையான ஆராதனை

**வேத வசனம்:** **இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.**
*சங்கீதம் 22:3*

**அறிக்கை:** **நாம் தேவனை ஆராதித்து அவருடைய மகிமையுள்ள பிரசன்னத்திற்குள் வருவோம்**



**சத்தியம்:** ஓ தேவனாகிய கர்த்தாவே, என் இராஜாவே, இந்த உலகம் உம்முடைய மகத்துவமான செயல்களையும் உம்முடைய ராஜ்யத்தின் மகத்துவத்தையும் அறிந்து கொள்ளும்படி நான் உம்மை ஆராதித்து உம்முடைய நாமத்தை எப்பொழுதும் மேன்மைப்படுத்துவேன்.

### வேத பகுதி: சங்கீதம் 103

### பாடம்

**1. தேவன் துதிக்கும் கனத்துக்கும் பாத்திரர்:** நம் கர்த்தர் எல்லா மகிமைக்கும், ஆராதனைக்கும் உரியவர் என்று சங்கீதங்களின் புத்தகம் தெளிவாக கூறுகிறது. அவர் மிகப்பெரியவர் என்பதால் நாம் அனைவரும் அவரை உயர்த்தவும் மகிமைப்படுத்தவும் செய்கிறோம். "ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன். நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது." (சங்கீதம் 145: 1-3)

**2. தேவனை ஆராதிப்பதற்காகவே நாம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம்:** நாம் தேவனை ஆராதிக்கும்படியாகவும் எல்லாவற்றிலும் அவருக்கு நன்றி செலுத்தும்படியாகவும் அவர் நம்மை உருவாக்கியிருக்கிறார். "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என்று தாவீது அரசன் குறிப்பிடுகிறார். தேவன் நமது பாவங்களை மன்னித்து, நம் நோய்களையெல்லாம் குணமாக்கி, நம்மை அழிவுக்கு விலக்கி மீட்டு, நன்மையினால் நம் வாயை திருப்தியாக்கியிருக்கிறார். (சங்கீதம்:103:1-5)

**3. எல்லா நாமத்துக்கும் மேலான நாமம்:** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து - என்ன ஒரு மகிமையான பொக்கிஷம் போன்ற பெயர் இது. உலகில் உள்ள பெயர்கள் அனைத்திலும் மேலான பெயர் இதுவே. "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்". அவர் நமக்காக இரத்தம் சிந்தி நம் பாவங்களை எல்லாம் சிலுவையில் சுமத்தி விட்டார். ஆகையால் நாம் அவருடைய பரிசுத்த நாமத்தை உயர்த்து வோம். இன்றும் என்றென்றும் அவருடைய பெயர் பூமியிலெங்கும் உயரட்டும். (அப். 2:21, சங். 72:18,19)

**4. தேவனுடைய பிரசன்னத்தில் வந்து வாசம் பண்ணுதல்:** மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டவன். சரீரம் என்று வேதம் குறிப்பிடுவது இயல்பாகவே பாவமுள்ளது. அது தேவனை ஆராதிக்கவும் விரும்புகிறது. ஆகையால் நாம் முழு உள்ளத்தோடு தேவனை ஆராதிக்க தீர்மானம் செய்ய வேண்டும். தேவனுடைய மகிமையும் மகிழ்ச்சியுமான சந்நிதானத்தில் நாம் சேரும் சிலாக்கியத்தை தேவன் நமக்காக சம்பாதித்து வைத்திருக்கிறார். அவர் களைத்துபோனவர்களுக்கு பெலன் தருகிறார். வருந்துவோரை ஆறுதல் செய்கிறார். நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கைத் தருகிறார். (ரோமர் 7:18-19., 1 நாளாகமம் 16:26-27)

**முடிவுரை:** மகிமையுள்ள சிங்காசனத்தில் இருக்கும் தேவன் ஆராதனைக்குரியவர். ஆகையால் நாம் அவரை பாடலுடன் ஆராதித்து, அவருடைய மகிமையுள்ள சந்நிதானத்தில் தங்கியிருந்து மிகவும் உயர்வான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு மகிமை செலுத்துவோம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.